# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை -2024

# பின்னூட்டல் செயற்பாட்டுப் பத்திரம்

# தேர்ச்சி 03. அல் அக்லாக் வத் தஸ்கியா (நற்பண்புகள்)






**தேர்ச்சி -**

- தஸ்கியா பற்றி விளங்கி ஆன்மீக ஒழுக்கப் பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுகுவார்.

**தேர்ச்சி மட்டங்கள்:**

- 10.3.1 தஸ்கியா பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தை அறிந்து அவற்றைக் கடைப்பிடித்து வருவார்.
- 10.3.2 நற்பண்புகள் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை அறிந்து அவற்றைக் கடைப்பிடித்து வருவார்.
- 10.3.3 ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிமுறைகளை குர்ஆன், சுன்னா ஆதாரங்களினூடாக விளங்கி வாழ்வில் கடைப்பிடித்தொழுகுவார்.
- 11.3.1 இஸ்லாம் கூறும் நற்பண்புகளை அறிந்து அவற்றை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவார்.
- 11.3.2 ஒழுக்க மேம்பாட்டுக்கான வழிமுறைகளை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவார்.
- 11.3.3 ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிமுறைகளை அறிந்து செயற்படுவார்.

**சுருக்கமான விடை தருக.**

1. இஸ்லாத்தில் ஒழுக்கத்தின் முக்கியத்துவம் யாது?

   ……………………………………………………………………………………..

   ……………………………………………………………………………………..

2. தௌபா (பாவமீட்சி) ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள் நான்கு தருக.

   ……………………………………………………………………………………..

   ……………………………………………………………………………………..

   ……………………………………………………………………………………..

   ……………………………………………………………………………………..

3. மன அமைதி பெறுவதற்கு இஸ்லாம் காட்டியுள்ள வழிமுறைகள் நான்கைக் குறிப்பிடுக.?

   ……………………………………………………………………………………..

   ……………………………………………………………………………………..

4. ஸூரா லுக்மான் குறிப்பிடும் மூன்று ஒழுக்கப் பண்புகளைக் குறிப்பிடுக.

   ……………………………………………………………………………………..

   ……………………………………………………………………………………..

5. ஸூரா புர்கானில் குறிப்பிடப்பட்டுள்ள நற்பண்புகள் ஐந்தைக் குறிப்பிடுக.

   ……………………………………………………………………………………..

   ……………………………………………………………………………………..

6. ஸுஹ்த், ரஹ்பானிய்யா என்பவற்றிற்கு இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

   ……………………………………………………………………………………..

   ……………………………………………………………………………………..

7. இஸ்லாம் குறிப்பிடும் நற்பண்புகள் நான்கைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றிற்கும் நபி (ஸல்) அவர்களின் வாழ்விலிருந்து ஒவ்வோர் உதாரணம் தருக.

   ……………………………………………………………………………………..

   ……………………………………………………………………………………..

   ……………………………………………………………………………………..

   ……………………………………………………………………………………..

8. "தஸ்கியதுந் நப்ஸ்"என்பதன் மொழிக் கருத்து யாது?

   ……………………………………………………………………………………..

   ……………………………………………………………………………………..

9. அல்குர்ஆன் விளக்கும் உள்ளத்தின் மூன்று நிலைகளையும் குறிப்பிடுக.

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

10. ஒழுக்கத்தை வலியுறுத்தும் ஹதீஸ் ஒன்றைத் தருக.

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

11. ‘‘தஸ்கியதுந் நப்ஸின்’’ முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் அல்குர்ஆன் ஆதாரமொன்றைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

12. உளப் பரிசுத்தம் ஏற்படுவதற்காக ஒருவர் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஐந்து விடயங்களை எடுத்துக்காட்டுக.

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

13. ஆன்மீக மேம்பாட்டுக்கு இஸ்லாத்தின் வழிமுறைகள் நான்கைக் குறிப்பிடுக.

…………………………………………………………………………………….

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

14. சூழல் சார் விழுமியங்கள் தொடர்பில் இஸ்லாம் கற்றுத் தரும் ஒழுக்கங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

15. தாருல் பனா- தாருல் பகா ஆகிய இரு பதங்களையும் வேறுபடுத்துக.

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

16. நல்லொழுக்கப் பண்புகளை வகைப்படுத்தக் கூடிய பிரதான தலைப்புக்கள் ஐந்தினைக் கூறுக.

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

17. இஸ்லாமிய கடமைகள் எவ்வாறு நல்லொழுக்கங்களின் பால் ஈர்க்கப்படுவதற்குப் பயிற்றுவிக்கின்றன என்பதனை விளக்குக.

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

18. ம.ஃ.ரிபா எனும் பதத்தை விளக்குக.

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

19. நபி (ஸல்) அவர்கள் பாதுகாப்புத் தேடி பிரார்த்தித்த விடயங்கள் நான்கைக் குறிப்பிடுக.

………………………………………………………………………………

………………………………………………………………………………

20. ஈகை மூலம் கிடைக்கும் பயன்கள் இரண்டு தருக.

………………………………………………………………………………

………………………………………………………………………………

21. இ.ஃ.லாஸ் என்ற பதத்தின் விளக்கம் யாது?

……………………………………………………………………………

……………………………………………………………………………

22. அன்பு வைத்தலின் இரு பிரிவுகளையும் குறிப்பிடுக.

……………………………………………………………………………

……………………………………………………………………………

23. பொறுமைக்குரிய சந்தர்ப்பங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

24. பணிவு பற்றிய அல்குர்ஆன் வசனமொன்றைக் கூறுக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

25. தொழுகை எவ்வாறான நற்பண்புகளை ஒருவரில் வளர்க்கிறது?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

26. அல் மு.்.னி – அல் மு.்.தீ என்ற பதங்களின் விளக்கம் யாது?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

27. நாணயம் பற்றிய அல்குர்ஆன் வசனமொன்றைக் கூறுக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

28. ஈகை பற்றிய அல்குர்ஆன் வசனமொன்றைக் கூறுக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

29. ஸுஹ்த் – வர.். ஆகிய பதங்களை விளக்குக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

30. ஜீவராசிகள் மீது அன்பு காட்டுவதன் அவசியம் பற்றிய நபிமொழி ஒன்றைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

31. நற்பண்பு என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக.

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

32. தவக்குல் என்பதால் கருதப்படுவது யாது?

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

33. ரிழா என்றால் என்ன?

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

34. "கல்புன் ஸலீம்" என்பதன் கருத்து யாது?

………………………………………………………………………………

35. மன்னிப்பதன் சிறப்பை எடுத்துக் காட்டும் குர்ஆன் ஆதாரம் ஒன்றைக் குறிப்பிடுக.

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை -2024

## பின்னூட்டல் செயற்பாட்டுப் பத்திரம்:

## தேர்ச்சி 03. அல் அக்லாக் வத் தஸ்கியா (நற்பண்புகள்)

**விடைகள் :**

01.

- ஒழுக்கம் ஈமானுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளமை (வெட்கம் ஈமானின் ஒரு பகுதி- புகாரி)
- நபியவர்கள் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டதன் நோக்கமே ஒழுக்கத்தைப் பூரணப்படுத்துவதற்காகும் என்ற ஹதீஸ்
- ஸூரா லுக்மான், ஸூரா புர்கானில் நற்பண்புகள் பட்டியல்படுத்தப்பட்டு கூறப்பட்டுள்ளமை
- நபியவர்கள் நற்பண்புகளின் சிகரம் என வர்ணித்துள்ள அல்குர்ஆன் வசனம்

02.

1. அல்லாஹ்வுக்காக என்ற கலப்பற்ற எண்ணத்துடன் பாவ மன்னிப்பை வேண்டுதல்.
2. பாவத்திலிருந்து முற்றாக நீங்குதல்
3. செய்த பாவத்துக்காக வருந்துதல்
4. குறித்த பாவத்தை இனிமேல் செய்வதில்லையென உறுதிகொள்ளல்.
5. மனிதர்களுடன் தொடர்புடைய பாவமாக இருந்தால் குறித்த நபரிடம் மன்னிப்பை வேண்டுதல்.

03.

1. எப்போதும் அல்லாஹ்வை நினைவுபடுத்துதல்,
2. திர்க், துஆ, இஸ்தி∵பார் என்பவற்றில் ஈடுபடல்,
3. இரவு நேரங்களில் வணக்கங்களில் ஈடுபடல்
4. நபிலான நோன்புகளை நோற்றல்
5. அல்குர்ஆனை ஓதல்
6. முஹாஸபாவில் ஈடுபடல்
7. தர்மம் செய்தல்
8. தனித்திருந்து அல்லாஹ்வுடன் முனாஜாத் செய்தல்
9. பாவங்களிலிருந்து விலகியிருத்தல்

04.

1. அல்லாஹ்வுக்கு எந்தவொன்றையும் இணையாக்காதிருத்தல்
2. தொழுகையை நிலைநாட்டுதல்
3. நன்மையை ஏவி, தீமையைத் தடுத்தல்
4. துன்பங்களின் போது பொறுமையாக இருத்தல்
5. பெருமையடிக்காதிருத்தல்
6. நடையில் நடு நிலையான தன்மையைக் கடைப்பிடித்தல்
7. சப்தத்தைத் தாழ்த்திக் கொள்ளுதல்

05.

1. பூமியில் பணிவாக நடத்தல்
2. அறிவீனர்களுடன் தர்க்கிக்காமல் கண்ணியமாக விலகியிருத்தல்
3. இரவில் கூடுதலாக இறைவனை வணங்குதல்
4. நரக வேதனையிலிருந்து பாதுகாப்புத் தேடுதல்
5. வீண் விரயம் செய்யாதிருத்தல்
6. உலோபித்தனம் செய்யாதிருத்தல்
7. அல்லாஹ்வுக்கு எதனையும் இணையாக்காதிருத்தல்
8. நியாயமின்றி கொலை செய்யாதிருத்தல்
9. விபச்சாரம் செய்யாதிருத்தல்
10. பொய்ச் சாட்சி கூறாதிருத்தல்
11. வீணான காரியங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளல்
12. அல்குர்ஆன் வசனங்களுக்கு செவிசாய்த்தல்

06.

ஸுஹ்த் என்பது பற்றற்ற வாழ்வு, ரஹ்பானிய்யா என்பது துறவற நிலையைக் குறிக்கும். பற்றற்ற வாழ்வை இஸ்லாம் தூண்டுகின்றது. துறவறத்தை இஸ்லாம் வெறுக்கின்றது.

07.

அன்பு, தியாகம், ஈகை, நாணயம், புலன்களைப் பேணல்

அன்பு : - ஹவாஸிக் குலத்தைச் சேர்ந்த கைதிப் பெண்ணைப் பார்த்து நபியவர்கள் கூறியவை

தியாகம்: நபியவர்களின் விருந்தாளிக்கு உணவளித்த அன்ஸாரித் தோழர்

ஈகை : ஆயிஷா (ரழி) அவர்கள் ஆட்டைக் குர்பான் வைத்த சம்பவம்

நாணயம் : களவாடிய பெண்ணுக்காக சிபாரிசு செய்த சம்பவம்

08.

உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தல்

09.

நப்ஸுல் அம்மாரா பிஸ்ஸுஃ, நப்ஸுல் லவ்வாமா, நப்ஸுல் முத்மஇன்னா

10.

- நான் நற்பண்புகளைப் பூரணப்படுத்துவதற்காகவே அனுப்பப்பட்டுள்ளேன்.
-வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகும்
-அவர்களது பண்பாடுகள் அல்குர்ஆனாகவே இருந்தன என ஆயிஷா (ரழி) அவர்கள் குறிப்பிட்டார்கள் (முஸ்லிம்)

11.

“நிச்சயமாக யார் உள்ளத்தை தூய்மைப்படுத்துகிறாரோ அவர் வெற்றி பெற்றுவிட்டார்” (91: 9)

12.

முகஸ்துதி, பெருமை, பொறாமை போன்ற இழிகுணங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளல், பர்ளான கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றல், நபிலான வணக்கங்களை நிறைவேற்றல், திக்ர்களில் ஈடுபடல், அல்குர்ஆனை அதிகம் ஓதுதல், தவ்பா செய்தல்

13.

இஃலாஸ், தவ்பா, தக்வா, வரஃ, ஸுஹ்த், தவக்குல்,

14.

1. பயன் தரும் தாவரங்களைப் பாதுகாத்தல்,
2. பொது இடங்கள், நீர் நிலைகளின் சுத்தத்தைப் பேணல்
3. மனிதனுக்கோ ஏனைய உயிரினங்களுக்கோ நோவினை தரும் பொருட்களை சூழலிலிருந்து அகற்றுதல்

15.

தாருல் பனா என்பது அழியக்கூடிய இவ்வுலக வாழ்வு என்பதாகும். தாருல் பகா என்பது முடிவில்லாத மறுமை வாழ்வு என்பதாகும்.

16.

1. உயர் பெறுமானங்களைக் கடைப்பிடித்தல் (அன்பு, நீதி, வாய்மை, நேர்மை….)
2. மரியாதைக்குரிய செயல்களை மதித்து நடத்தல் (பெற்றோர், மூத்தோர், ஆசிரியர், கல்விமான்கள்…)
3. நாகரிகமற்றவைகளைத் தவிர்ந்து நடத்தல் (பொது இடங்களில் துப்புதல், மலசலம் கழித்தல்…)
4. ஆபாசமானவைகளைத் தவிர்ந்து கொள்ளல் (கீழ்த்தரமான பாலுணர்வைத் தூண்டக் கூடிய ஆடை, வார்த்தை, களியாட்டங்கள்…)

5. சூழல் சார் விழுமியங்களைக் கடைப்பிடித்தல் (தாவரங்களைப் பாதுகாத்தல், சுத்தத்தைப் பேணுதல்…)

17.

தொழுகை: உள்ளத்தைச் சுத்தப்படுத்தி அதற்குப் பிரகாசத்தைக் கொடுக்கின்றது. இதன் மூலம் நல்லொழுக்கத்தையும் தீய செயல்களையும் பிரித்தறிந்து நல்லொழுக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றான்.

ஸக்காத் : வறிய மக்கள் மீது அன்பு, தயாள சிந்தை ஏற்படுகின்றது. உலோபித்தனத்திலிருந்து பாதுகாப்பு கிடைக்கின்றது. உலக ஆசையிலிருந்து தூய்மை பெறுகின்றது.

நோன்பு: உள ஆசைகள் தீய உணர்வுகளிலிருந்து பாதுகாக்கின்றது. இறையச்சம், பொறுமை, ஈகை போன்ற உயர் பண்புகளை வளர்க்கின்றது.

ஹஜ் : தியாகம், அர்ப்பணிப்புக்கான பயிற்சியை கொடுக்கின்றது. சகோதரத்துவம், சமத்துவம், சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு போன்ற உயரிய குணங்களை ஏற்படுத்துகின்றது.

18.

மொழிக் கருத்து, அறிவு என்பதாகும். பரிபாஷை ரீதியில், அல்லாஹ்வைக் கண்ணால் காண்பது போன்று அறிவதன் மூலம் உளப் பேரின்பமடைதலைக் குறிக்கின்றது.

19.

1. பிரயோசனமற்ற அறிவு
2. பணிவு இல்லாத உள்ளம்
3. திருப்தியடையாத உள்ளம்
4. பதிலளிக்கப்படாத பிரார்த்தனை

20.

-இவ்வுலகில் அல்லாஹ்வின் அன்பும், மனிதர்களின் அபிமானமும் கிடைக்கும்.
-மறுமையில் மகத்தான கூலி கிடைக்கும்
-செல்வத்தில் அபிவிருத்தி உண்டாகும்.
-ஆபத்துகள் அகன்றுவிடும்.
-மனதுக்கு மகிழ்ச்சியும், நிம்மதியும் கிடைக்கும்.

21.

-மனத்தூய்மை, கலப்பற்ற எண்ணம் என மொழி ரீதியில் பொருள்படும்.
-பரிபாஷை ரீதியில் ஓர் அடியான் எச்செயலைச் செய்தாலும் அது அல்லாஹ்வின் திருப்தியை மாத்திரமே நோக்காகக் கொண்டதாக இருப்பதைக் குறிக்கும்.

22.

-1. அல்லாஹ்வின் மீது அன்பு வைத்தல்

-2. படைப்பினங்கள் மீத அன்பு வைத்தல்

23.

கோபம் வரும்போது அடக்கிக் கொள்ளல்,

பேராசையின் போது போதுமாக்கிக் கொள்ளல்,

சோதனையின் போது தாங்கிக் கொள்ளல்,

கவலை-துக்கத்தின் போது அவற்றைத் சகித்துக் கொள்ளல்,

பாவத்தின் பால் உள்ளம் ஈர்க்கப்படுகின்றபோது தவிர்ந்து கொள்ளல்,

நற்காரியங்களில் சோர்வு ஏற்படும் போது திட உறுதியாய் நிற்றல்,

இழப்புக்களின் போது பொருட்படுத்தாமல் நிற்றல்,

வாழ்க்கை சுமைகளின் போது தாங்கிக் கொள்ளல்,

பிரச்சினைகள் வரும் போது எதிர்கொள்ளல்,

பழிக்குப் பழி உணர்வு வரும்போது மன்னித்தல்,

விருப்பத்துக்கு மாறான முடிவுகளை கேட்கும்போது ஏற்றுக் கொள்ளல்.

24.

“இவர்கள் தாம் ரஹ்மானுடைய அடியார்கள். பூமியில் அடக்கமாகவும் பணிவாகவும் நடப்பார்கள். மூடர்கள் அவர்களுடன் தர்க்கிக்க முற்பட்டால் சலாமுன் என்று கூறி அவர்களை விட்டு விலகி விடுவார்கள்” (25:63)

25.

தீய செயல்களிலிருந்து விலகி நல்லொழுக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் உள்ளத்தை ஏற்படுத்துகின்றது.

26.

இவை இரண்டும் அல்லாஹ்வின் பண்புகளாகும். அல் மு.ஃ.னி என்பது செல்வந்தனாக ஆக்குபவன் என்பதையும், அல் மு.ஃ.தீ என்பது கொடுப்பவன் என்பதையும் குறிக்கின்றது.

27.

“நீங்கள் அளந்தால் பூரணமாக அளவுங்கள். நிறுத்தால் சரியான எடையைக் கொண்டு நிறுங்கள்” (17:35)

“அளவை நிறுவையில் மோசடி செய்பவருக்குக் கேடுதான்” (83:1)

28.

‘‘ஆதலால் உங்களால் இயன்ற வரையில் அல்லாஹ்வுக்குப் பயந்து அவனுக்கு செவி சாய்ந்து வழிபட்டு நடந்து தானமும் செய்யுங்கள். இது உங்களுக்குத் தான் நல்லது. எவர்கள் உலோபித்தனத்திலிருந்து தம்மை இரட்சித்துக் கொண்டார்களோ அத்தகையோர் நிச்சயமாக சித்தியடைந்தோர் ஆவார்’’(64:16)

29.

ஸுஹ்த் என்பது பற்றற்ற வாழ்வைக் குறிக்கின்றது. ஆன்மீக மேம்பாட்டுக்கென இஸ்லாம் காட்டும் ஒரு வழிமுறையாக இது காணப்படுகின்றது. பற்றற்ற வாழ்வு என்பது மறுமை வாழ்வுடன் ஒப்பிடும் போது இவ்வுலக வாழ்க்கையை அற்பமானதாகக் கருதுவதாகும்.

வரஃ என்பதன் கருத்து பேணுதல் என்பதாகும். அதாவது, குற்றம் நிகழ்ந்து விடுமோ எனும் பயத்தினால், குற்றம் இல்லாத ஒன்றையும் விட்டுவிடுகின்ற தன்மையை இது குறிக்கின்றது.

30.

‘‘உங்கள் மிருகங்களின் முதுகை உங்களது சாய்வு நாற்காலிகளாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்’’ (அஹ்மத்)

‘‘படைப்புக்கள் அனைத்தும் அல்லாஹ்வின் பராமரிப்பில் உள்ளனவே. மண்ணில் உள்ளவற்றுக்கு அன்பு காட்டுங்கள். விண்ணில் உள்ளவன் உங்கள் மீது இரக்கம் காட்டுவான்’’ (அபூதாவூத்)

31.

அரபு மொழியில் குலுக் ஹஸன், அக்லாக் ஹஸனா, மகாரிமுல் அக்லாக், அதப், ஆதாப் முதலான பதங்கள் நற்பண்புகளைச் சுட்டிக்காட்டுவதற்குப் பிரயோகிக்கப்படுகின்றன.

பக்குவப்பட்டதும், அங்கீகரிக்கப்பட்டதுமான ஒரு வாழ்வுக்குத் தேவையான, நபியவர்கள் காட்டிச் சென்ற உயரிய குணங்களே நற்பண்புகள் ஆகும்.

‘‘நபியே நிச்சயமாக நீர் பண்பின் சிகரமாக இருக்கின்றீர்’’ (அல்கலம்:04)

32.

தவக்குல் என்பதன் மொழிக்கருத்து பொறுப்புச் சாட்டுதல் என்பதாகும்.
இது முயற்சி, அல்லாஹ்வின் மீதுள்ள நம்பிக்கை என்பவற்றின் சேர்க்கையாகும். இஸ்லாமிய வழக்கில், எமது முயற்சிகளின் முடிவை அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டுதல் தவக்குல் எனப்படுகின்றது.

33.

ரிழா என்பதன் **மொழிக் கருத்து** பொருந்திக் கொள்ளல் என்பதாகும்.
**இஸ்லாமிய வழக்கில்,** எமக்கு அல்லாஹ்வின் ஏற்பாட்டின்படி அமையும் அனைத்து நிலைகளையும் பொருந்திக் கொண்டு மனத்திருப்தியடைவதற்கே ரிழா என்று சொல்லப்படும்.

34.

தூய உள்ளம்

35.

''அவர்கள் எத்தகையோரென்றால் செல்வ நிலையிலும், வறுமை நிலையிலும் தானம் செய்து கொண்டேயிருப்பார்கள். கோபத்தை விழுங்கி விடுவார்கள். மனிதர்களை மன்னித்து விடுவார்கள். அல்லாஹ் இத்தகைய நல்லோரையே நேசிக்கிறான்''
(ஆல இம்ரான் : 134)

''எவரேனும் பிறர் செய்த தீங்கைப் பொறுத்துக் கொண்டு மன்னித்து விட்டால் நிச்சயமாக இது மிகவும் வீரம் மிக்க செயலாகும்.'' (அஷ்ஷூரா :43)